தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 12, யுவ – திருவள்ளுவர் ஆண்டு-2026

1995, ஏப்ரல் 25, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடற
வல்லதூஉம் ஐயம் தரும்"

புல்லறிவாளர்கள் தாம் கற்காதவற்றையும் கற்றவர்கள் போலக் காட்டிக்கொண்டு நடத்தலானது, அவர்கள் நன்கு கற்ற நூல்கள் இருக்குமேயானால், அந்த நூல்களைப் பற்றியும் மற்றவர்களுக்கு ஐயத்தை உண்டாக்கிவிடும்.

1. இரங்கற் குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. எம். மொட்டையன் அவர்கள், *3-3-1995* அன்றும், திரு. சம்சுதீன் என்கிற கா. மு. கதிரவன் அவர்கள் *23-4-1995* அன்றும் மறைவுற்றது குறித்துப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். மொட்டையன் அவர்கள் *1952* ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தொகுதியின் தனித் தொகுதியிலிருந்து அன்றைய சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு *1952* ஆம் ஆண்டு முதல் *1957* ஆம் ஆண்டு வரை நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. சம்சுதீன் என்கிற கா. மு. கதிரவன் அவர்கள் 1968-ஆம் ஆண்டு நடைபெற்ற இடைத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டு 1970-ஆம் ஆண்டு வரையும், பின்னர் 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரையும் அன்றைய திருநெல்வேலி மாவட்டம் தென்காசித் தொகுதியிலிருந்து தொடர்ந்து இரு முறையும், மற்றும் 1989 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி மாவட்டம் கடையநல்லூர்த் தொகுதியிலிருந்தும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு மொத்தம் 3 முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, செவ்வனே பணியாற்றி உள்ளார். மேலும் அவர் 1989 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரை அரசு தலைமைக் கொறடாவாகப் பொறுப்பேற்று திறம்படச் செயலாற்றி உள்ளார்.

அன்னார்களது மறைவு குறித்து, அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும், இப்பேரவையின் சார்பிலேயும், என் சார்பிலேயும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்தியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்)

2. வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 421, திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்.

421 —

திருப்பத்தூரில் நெல் கொள்முதல் நிலையம் அமைத்தல்

*** 40536—** திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் :

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் நகரில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்படுமா?